**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால்

அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் நடப்பாண்டு இறுதியில் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த கிரயம் ரூபா 464,077,703 ஆன சொத்துக்கள் 05 வருடங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 ஆம் வருடத்தில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின பிரகாரம் வருடாந்தக் கணக்குகளில் அப் பெறுமதி உள்ளடக்கப்பட்டு 2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குவதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மற்றும் தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபைக்கும் இடையே ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களினால் காணப்பட்டு வருகின்ற ரூபா 129,168,821 ஆன நடைமுறைக் கணக்கு மீதி கிளிநொச்சி நிறுவகம் இலங்கை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் கணக்கு மீதிகள் | கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த நிறுவனத்திற்கு கையளித்தல் தொடர்பான நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் இன்னும் முடிவடையாமையால் அப் பணிகள் முடிவடைந்ததும் விரைவில் உரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பீடு | கணக்கு மீதிகள் இணக்கப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்றி அம்மீதி நிறுவனத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. | செய்யப்பட்டு இக் கணக்கு மீதி முறையான அனுமதியுடன் பதிவளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கூட்டுத்தொகை ரூபா 1,407,197 ஆன கடன்பட்டோர் மீதிகள் மற்றும் 05 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 932,436 ஆன மீதிகள் அறவிடப்படுவதற்கோ அல்லது நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டு புத்தகங்களில் பதிவளிப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய கடன்பட்டோரில் அதிகளவு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்துகளைத் திருத்துதல் தொடர்பான அறவிட வேண்டிய தொகை என்பதைக் குறிப்பிடுகிறேன்.<br><br>நீண்ட காலமாக அறவிடப்பட முடியாதிருக்கின்ற மீதிகளை அங்கீகாரத்துடன் புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | நிரந்தர நியமனமொன்று செய்யப்படும் வரையில் தற்காலிகத் தீர்வொன்றாக மட்டுமே பதில் கடமை நியமனமொன்று செய்யப்படல் வேண்டும். பதவிக்கான முழு நேர உத்தியோகத்தரின் சேவை தேவைப்பட்டால் நிரந்தர நியமனமொன்று விரைவில் செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் பணிப்பாளர் அதிபர் பதவிக்காக நிரந்தர | பணிப்பாளர் அதிபர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு அமைச்சின் மூலம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரம் கோரப்பட்டு கடிதமொன்று அனுப்பபட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக நிறுவனம் போதியளவு நடவடிக்கை எடுக்காது கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர் ஒருவர் 2020 பெப்ரவரி 18 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தார். | இதுவரை அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு எவ்வித படிகளும் செலுத்தப்பட முடியாதென தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் வருடத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இணையத்தளத்தினூடாக விரிவுரைகளை நடாத்தியமைக்காக கல்விசார் பதவியணிக்கு மாதாந்தம் ரூபா 2000 வீதம் 2021 ஆம் வருடத்தில் மொத்தம் ரூபா 1,634,000 செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட செலவில் இணையதளத்தைப் பயன்படுத்தி விரிவுரைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்தியமைக்காக நிறுவனத்தின் அனுசரணையாக வழங்கப்பட்ட ரூபா 2000 ஒவ்வொரு பிரிவிலும் பிரிவுத் தலைவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஒரு விஞ்ஞாபனத்தில் அனுப்பப்பட்டு அதிபரின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்ததாக தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |
| (இ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலக்கம் 38 1(ஈ) பந்தி | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதை சான்றுபடுத்த வேண்டியுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியிருந்த | 2018 மற்றும் 2019 ஆம் வருடாந்த அறிக்கைகள் விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களின் வருடாந்த அறிக்கைகள் இற்றை வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 24,918,761 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 22,943,923 என்பதால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவு 8.6 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,974,838 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 62,986,097 ஆல் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தங்களுக்கான சேவைச் செலவுகள் ரூபா 7,323,542 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் வாகனங்கள் திருத்தப் பிரிவின் வேலைத் தளத்தை அமைப்பதற்காக பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விஞ்சியதாக ரூபா 1,218,922 தனிப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வொப்பந்தத்திற்கான குறைந்த பட்ச விலை சமர்ப்பித்த நிறுவனம் நிராக்கப்பட்டமைக்கு காரணமான காரணிகளை உறுதிப்படுத்துவதற்கான உரிய ஆவணங்கள் கோவையில் சேர்க்கப்படாது இரண்டாவது குறைந்த விலையில் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,196,022 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இப் பணி தொடர்பாக பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 8,363,600.000 (வரி நீங்கலாக) ஆக இருந்ததுடன் கொடுப்பனவுகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட தொகை ரூபா 9,163,000.25 ஆகும்.<br><br>அதன் பிரகாரம், ஒட்டு மொத்த விலை வேறுபாடு ரூபா 799,400.25 ஆகும். மேலும் விலை முரண் 9.56 % ஆக இருந்ததுடன் அது சிறிய ஒரு முரண் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>குறைந்த விலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர் உரிய பணிக்கு பொருத்தமற்ற மனுக்கோரல் ஆவணத்தில் சமர்ப்பித்ததன் அடிப்படையில் அதன் விலை மனு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கடந்த 05 வருட காலப்பகுதியில் முழு நேர கற்கைகளுக்கான கோரிக்கைகள் ஆண்டுதோறும் அதிகரித்திருந்த போதிலும், அதிகரித்து வரும் கோரிக்கைகளுடன் ஒப்பிடும் போது கற்கை நெறிகளுக்கான ஆட்சேர்ப்பு அதிகரிப்பதற்கு 2016 ஆம் வருடத்திலிருந்து 2021 ஆம் வருடம் வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. முழு நேரக் கற்கை நெறிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைக்கு ஏராளமான மாணவர் பங்குபற்றிய போதிலும், அதில் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 20 சதவீததிற்கும் குறைவாகக் காணப்பட்டதுடன் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 05 வருடங்களாக 600 என்ற நிலையான மதிப்பில் காணப்பட்டது. அத்துடன் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் 2017 ஆம் வருடத்திலிருந்து மாணவர்களின் ஆட்சேர்ப்பு 270 மாத்திரமே என்பதுடன் இது வரையில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மாணவர்கள் ஆட்சேர்ப்பு எல்லையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கடந்த 05 வருட காலப்பகுதியில மொறட்டுவ கிளையில் முழு நேரக் கற்கை நெறிகளுக்கான கோரிக்கைகள் அதிகரித்திருந்த போதிலும் தற்போது காணப்படுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் இட வசதிகள் வருடத்திற்கு 600 மாணவர்களுக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதுடன் அதற்கு மாற்றீடாக பொரல்ல நிலையம் மற்றும் ஆனமடுவ பிராந்திய நிலையம் நிறுவப்பட்டு மேலதிக கோரிக்கைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்குான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக முழு நேரக் கற்கை நெறிகளுக்கு பங்கு பற்ற முடியாத பிள்ளைகளுக்கு பகுதி நேர கற்கை நெறிகளுக்கு பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் தெரிவு செய்யும் போது முன்னுரிமையொன்று வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் வருடாந்தம் 4000 வரையான மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். | நிறுவனத்தின் திறனை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச் சட்டத்தில் 4(ஏ) பிரிவின் பிரகாரம் பிராந்திய பயிற்சி நிலையங்களை | 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச் சட்டத்தில் 4(ஏ) பிரிவின் | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிப்பதற்கு 2021 ஏப்ரல் 06 நடைபெற்ற கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் மட்டக்களப்பு பிரதேசத்தில் பிராந்திய பயிற்சி நிலையமொன்று ஆரம்பிப்பதற்கு கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பாக எவ்வித மேற்கொண்ட நடவடிக்கையொன்றும் எடுக்கபட்டிருக்கவில்லை. 2021 ஆம் வருடத்தில் புதிதாக ஆரம்பிக்கபட்ட ஆனமடுவ பயிற்சி நிலையத்திலும் ஒரு கற்கை நெறி மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் பங்கு பற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 67 என்பது அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் பிரதேச நிலையங்கள் இரண்டு இது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மொனராகல பிரதேசத்தில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் நிலையமொன்று ஆரமபிக்கப்படுவதற்காக தற்போது திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2016 ஆம் வருடத்தில் பொறல்ல பயிற்சி நிலையத்தில் 02 கற்கை நெறிகள் மற்றும் அடிப்படைக் கற்கை நெறிக்காக 147 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்த போதிலும் தற்போது வரையில் ஒரு கற்கை நெறியான முச்சக்கர வண்டி தொழில்நுட்ப பாட நெறி மாத்திரமே நடாத்தப்பட்டு வருவதுடன் மாணவர்களின் எண்ணிக்கை 44 ஆகக் குறைந்துள்ளது. | 3 வருடங்களாக மூடப்பட்டிருந்த பொறல்ல பயிற்சி நிலையம் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பொறல்ல பிரதேச நிலையமாக 2021 ஆம் வருடத்தில் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் முச்சக்கர வண்டி தொழில்நுட்ப பாட நெறி ஆரம்பிக்கப்பட்டது. இது வரையில் இரண்டு குழுக்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் வருடத்தில் பொறல்ல பிரதேச நிலையத்திற்கு இணைக்கப்படுவதை அறிமுகப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிறுவனத்தின் திறனை அதிகரிப்பதைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்திற்குச் சொந்தமான பணிப்பாளர்/அதிபர் உத்தியோகபூர்வ மனையில் நிறுவனத்தின் உத்தியோகத்தரல்லாத தொழில்துறை அமைச்சிற்கு சொந்தமான மேலதிகச் செயலாளர் ஒருவர் 2019 திசெம்பர் 27 ஆம் திகதியிலிருந்து வசித்து வருவதுடன் இது வரையில் அந்த | நிரந்தர அடிப்படையில் பணிப்பாளர்/அதிபாஹ் ஒருவர் நிறுவனத்தில் இல்லாத காரணத்தினால் உத்தியோகபூர்வ மனை பயன்படுத்தப்படவில்லை.<br><br>உத்தியோகத்தர் ஒருவர் வசிக்காவிட்டாலும் நிறுவனத்திற்கு சொந்தமான | உத்தியோகபூர்வ மனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொருத்தமான நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ மனை எந்தவொரு உத்தியோகத்தராலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் உத்தியோகபூர்வ மனையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மொத்தம் ரூபா 1,428,610 பயன் பாட்டுக்கு உட்படுத்தப்படாத உத்தியோகபூர்வ மனைக்காக நிறுவனத்தினால் செலத்தப்பட்டிருந்தது. | ஆதனமொன்று என்பதால் இதன் பாதுகாப்பிற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய பாதுகாப்பு நிறுவனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. | |
| (உ) | நிறுவனத்தினால் அனுபவிக்கப்பட்டு வந்த 29 ஏக்கர் மற்றும் 0.35029 ஹெக்டெயரான 05 காணிகளின் சட்டபூர்வ உரிமையைக் கையகப்படுத்துவதற்காக நிறுவனம் போதியளவு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | நீண்ட காலமாக அனுபவித்து வருகின்ற காணிகளின் மற்றும் கட்டிடங்களின் உரிமையை முறையான வகையில் நிறுவனத்திற்குக் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கையொன்று அமைச்சின் செயலாளருக்கு 2019.05.09 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் காணிகளின் உரிமையை கையளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டு அமைச்சின் செயலாளரால் காணி ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணி நிறுவனத்திற்குக் கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆண்டு வரை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தோருக்குச் சான்றிதழ் வழங்கப்படாத மாணவர்களின் எண்ணிக்கை 27 சதவீதத்திலிருந்து 61 சதவீதம் வரை உயர் சதவீதமொன்றாக காணப்பட்டதுடன் குறிப்பிட்ட மாணவர்களுக்கு | 2017 தொடக்கம் 2020 ஆம் வருடம் வரை முழு நேர கற்கை நெறிகளை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள் இறுதி தொழின் முறைப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் அவர்களுக்கு பரீட்சை முடிவுகள் வெளியான பிறகு | சான்றிதழ் வழங்குவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றிதழ் வழங்குவதற்கான முறையான அமைப்பொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் தற்காலிக சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். அச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையான மாணவர்கள் உள்ளூர் வேலைகளுக்கும் அத்துடன் வெளிநாட்டு வேலைகளுக்கும் விண்ணபிக்கின்றனர். அவர்களது பரிந்துரைக்கப்பட்ட சான்றிதழ் தேவைப்படும் போது நிறுவனத்திற்குப் வந்து சான்றிதழை எடுத்துக் கொள்கின்றனர் அச் சான்றிதழ் வழங்குவதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. | |
| (எ) | வெற்றிடங்கள் காணப்பட்ட ஐந்து பிரதான பதவிகளுக்கான கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப சம்பள மட்டம் தயாரிக்கப்பட்டு அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் நிறுவனத்தின் ஊழியர் பதவிகளை மறுசீரமைக்கும் போது சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஏற்பட்ட சிக்கல் நிலைமைகள் திறைசேரியுடன் கலந்துரையாடி திருத்தப்படுவதற்கும் 2019 மே 23 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் 2021 திசெம்பர் 31 வரையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் செயற்படுகின்ற அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் உயர்மட்ட நிர்வாக உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றினால் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் விழிப்பூட்டல்களின் பிரகாரம் ஊழியாகளின் மூப்பினைப் பாதிக்காமல் பெற்ற சம்பள உயர்வுகளின் பிரகாரம் உள்வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறைப் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பதவிகள் மறுசீரமைக்கப்படும் போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் திருத்தப்படல் வேண்டும். |

**3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் 2021 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 47.2 மில்லியன் ஆன 12 செயற்பாடுகளின் பணிகள் ஆரம்பிக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 12 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த 02 செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 1.831 மில்லியன் ஆகும். அது 20 சதவீத்திற்கும் குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டது. | மீளாய்வாண்டின் காலப்பகுதியில் எதிர்பாராதவாறு கொவிட் தொற்று நோய் பரவியதால் நிறுவனம் மூடப்படத் தொடங்கியதும் வேலைக்கு அழைக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை அத்துடன் அரசினால் பெறுகை செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென வெளியிடப்பட்டிருந்த சுற்றறிகையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமை என்பன நிறுவன முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் என்பதால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். | எதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு முடிந்தளவு செயற் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| | துறைசார்திறன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஒக்டோபர் 25 ஆந் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 06 மாடிகள் கொண்ட அத்திடிய பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதியின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிவடையவில்லை என்பதுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 75 சதவீதம் மற்றும் செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 559.7 மில்லியன் ஆகும். | தொழிற்பயிற்சி விடுதியின் நிர்மாண நடவடிக்கைகள் வரிசை அமைச்சின் கீழ் காணப்படும் துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பணிகள் நிறைவடைந்த பின்னர் நிறுவனத்திற்கு கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் செயற் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |